விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இனிய இதழ்

2 மார்ச் 2025 - 7-ம் இதழ்



இதழின் முத்தான படைப்பாளர்கள்

முத்து ஆனந்த் - ஜி.சுந்தரமூர்த்தி -
சு.மூன் சுதாகரன் - மலர்மதி
பாரதிராஜன் என்கிற ரங்கராஜன்
சு.அருண் பிரகாஷ் - செங்கமலன்
குடந்தை பரிபூரணன் - R.Anusha
நம்.திரு.ர அம்ஏச் - தி.ரேவதி
நடேஷ் கன்னா - ரதி

இனிய இதழ் பதிப்பு இன்று இனிய இதழ் 7094053241 Whatsapp

இன்று ஈ பதிப்பு 70940 53241 Whatsapp

விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

2 மார்ச் 2025 - 7-ம் இதழ்

வணக்கம்.

கோடைக்காலம் துவங்கிவிட்டது.
வெயில் சுட்டெறிக்கிறது. மழை
அறிவிப்பு போய் வெப்பத்தை
அறிவிக்கத்தொடங்கிவிட்டார்கள்...
இயற்கையை சமாளிக்கக் கற்றுக்
கொள்வோம்...

நண்பர்கள் சிலர் இன்று இதழில்
தொடர்கதைகள் இல்லையா என்று
கேட்டார்கள்... விரைவில் வரும்
என்றேன்...
இன்னும் சிலர்
அரசியல், சமூக அவலங்கள் போன்றவை
வெளியிட மாட்டீர்களா? என்றார்கள்...
அதற்கு நிறைய இதழ்கள் உள்ளன.
இன்றுவில் வெளியிட இயலாது என்றும்
தெரிவித்தேன்...

எழுத்தாளர்களுக்கு ஒரு இனிய அறிவிப்பு...
நீங்கள் எழுதிவைத்திருக்கும் படைப்புகளை
ஈ புத்தகமாக வெளியிட எங்களை
தொடர்புகொள்ளவும்.

இனிஒரு விதி செய்வோம்...

வாழ்த்துக்கள்...

படைப்பாளர்கள்,
படிப்பவர்கள்
அனைவருக்கும் நன்றி...

ர.ஸ்ரீஹரி
ஆசிரியர்

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

29 - சக்தி நகர், ஆதம்பாக்கம் சென்னை
செல் 70940 53241 e.mail : indhrumail@gmail.com

இன்று ஈ கிழ் பதிப்பு 7094053241 Whatsapp

போட்டித் தேர்வு

எதிர்ச்சொல்

1.அகலல் X கிட்டுதல்
2.அரியது X எளியது
3.அமைதி X குழப்பம்
4.அருமை X எளிமை
5.அரிது X எளிது
6.அலர்தல் X கூம்புதல்
7.அன்புடையார் X அன்பிலார்
8.அருளாளர் X அருளிலார்
9.அன்றே X இன்றே
10.அவை X இவை
11.அணைத்தல் X ஏற்றுதல்
12.அண்மை X அயல்
13.அகற்று X சேர்க்க
14.அரசன் X அரசி
15.அந்த X இந்த
16.அமிர்தம் X நஞ்சு
17.அப்பா X அம்மா
18.அயல்நாடு X உள்நாடு
19.அதிகம் X குறைவு
20.அரிய சொல் X எளிய சொல்
21.அறிஞர் X மூடன்
22.அகலமான X குறுகலான
23.அயல்நாட்டில் X உள்நாட்டில்
24.அறப்போர் X மறப்போர்
25.அடி X நுனி
26.அற்றை X இற்றை
27.அழித்தல் X ஆக்கல்
28.அன்பு X வெறுப்பு
29.அறிந்த X அறியாத
30.அன்பான X அன்பற்ற
31.அழ X சிரிக்க
32.அருமை X பெருமை
33.அண்மை X தொலைவு



பணம் மனிதனை மாற்றிவிடும்

இனிது ஈ சிந்திப்போம் இன்று ஈ பதிப்போம் 7094053241 Whatsapp

ஸ்பீடு போஸ்ட் கதைகள்



முத்து ஆனந்த்

வேலூர். செல் : 70104 82479

பயம்

தோற்றமும் அழகும் மென்மையாக இருந்தாலும் "கரடு முரடான குணம்" வைத்திருந்ததால் மல்லிகாவிற்குப் "பிரேக் அப்" கொடுத்தான் மிதுன்!

கவிதை

யாருக்கு வேண்டுமானாலும் "கவிதை" எழுதிக் கொடுத்தான் "காதலில் தோற்ற" சங்கர்!

பக்தி

அளவு கடந்த "பக்தி" இருந்தாலும் தன் "நாத்திக நண்பர்களுக்கும் மரியாதை" கொடுத்தான் சுரேஸ்குமார்!

அமைதி

அமைதியாக இருந்தால் "எல்லோரும் ஏமாற்றுகிறார்கள்" என்று "முரடனாக மாறினான்" கிரண்!

பழக்கம்

பொய் பேசும் "பழக்கம்" இல்லாததால் காதலிக்கவே" மிகவும் பயந்தான் முகுந்தன்!



பணம் ஒருவனை துன்பத்தில் இருந்து விடுவிக்கும்.

இன்று ஈ இதழ் பதிப்பு 7094053241 Whatsapp

Su	M	Tu	We	Th	Fr	Sa
30	31	March 2025				1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

குறைந்த செலவில்
உங்கள்
விளம்பரம் வெளியாக
அழைக்கவும்...
7094053241

இது நல்ல யோசனையா இருக்கு





பணம் சேர்ப்பது ஒரு கலை...

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

ஜோக்





ஜி.எஸ்.எம்,
முசிறி

மன்னர் பதுங்கு குழியில
பத்திரமா தானே இருந்தாரு...
எப்படி எதிரி நாட்டு
மன்னன் கிட்டமாட்டிக்கிட்டாரு...

டவர் கிடைக்கலைன்னு
வெளியே வந்திருக்காரு...

அரியலூர் அண்ணா நகர் - ஒரு
வீட்டில் கணவன் - மனைவி...


ஏங்க... மணி பத்தாவுது... சாப்பிட
வாங்க... தோசை ஊத்தி தர்றேன்...

இரும்மா ஸ்மிருத்தி மந்தனா பிப்டி
அடிக்கப்போறாங்க... பாத்துட்டு வர்றேன்..

அப்ப மந்தனாவ வந்து தோசை ஊத்தி
தரச் சொல்லுங்க..
நா போயி படுக்குறேன்..

(கணவர் சத்தம் இல்லாமல் டைனிங்
டேபிளுக்கு வருகிறார்...

Vikas Basic Grammar Class



Master your Grammar and write with confidence

COURSE HIGHLIGHTS:

. Understanding Grammar rules
.Perfect your sentence structure
.Preparing for your exam

vikasclasses.2023@outlook.com
Call @9962201523

COURSE SESSION:

- Every Monday, Wednesday and Friday
- Timing:6.30 pm to 7.30 pm



பணம் உழைப்பால் வரவேண்டும்

இன்று ஈ இதழ் பதிப்பு ஈ இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

பொது அறிவு







பணம் உள்ளவருக்கு
பல எதிரிகள்...

இன்று ஈ இதழ் பதிப்பு 7094053241 Whatsapp

சிந்திக்க ஒரு நொடி

தாய் தந்தை குருவை வாழ்நாளின் கடைசி வரை மதிப்பது கடவுள் மேல் உள்ள பக்தியை விட உயர்வானது.


யாரையும் குறைத்து மதிப்பிடாதீர்கள் எல்லோருக்குள்ளும் பல திறமைகள் ஒளிந்திருக்கின்றன

முத்து ஆனந்த், வேலூர்

- **உணவு** என்பது மருந்து
- **ஆடை** என்பது மானம்
- **பணம்** என்பது தேவை
- **ஆங்கிலம்** என்பது மொழி
- **தமிழ்** என்பது உயிர்
- **அம்மா** என்பது பாசம்
- **அப்பா** என்பது ஆசான்
- **ஆனந்தம்** என்பது ஆயுள்
- **சினம்** என்பது நோய்
- **துன்பம்** என்பது பரீட்சை
- **தோல்வி** என்பது பாடம்
- **வெற்றி** என்பது தற்காலிகம்
- **நட்பு** என்பது இளமை
- **குடும்பம்** என்பது பற்று
- **கர்மா** என்பது தொடரும்
- **எண்ணம்** என்பது வாழ்க்கை
- **உலகம்** என்பது மாயை
- **நான்** என்பது அறியாமை
- இதை உணர்ந்து கொண்டால் அவனே மனிதன்

முத்து ஆனந்த், வேலூர்





பணத்தை வீணாக செலவு செய்யாதே...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

மைக்ரோ கதை



-சு.மூன்சுதாகரன்,
வானவன்மாதேவி - செல் : 97875 98207

சமூகப் பொறுப்பு...

சுஜாதாவிடமிருந்து போன் வர
ஆவலாய் அட்டென்ட் செய்தான்

"ஹலோ பிரதாப்..."
இன்ஸ்பெக்டர் ரவிவர்மன் பேசுறேன்

"உங்க வைஃப் இப்ப
குரோம்பேட்டை ஸ்டேஷன்ல
தான் இருக்காங்க உடனே கிளம்பி
வாங்க என்றதும்,"
போன் இணைப்புத்
துண்டிக்கப்பட்டது.

"பதட்டம் கூடியது...
நம்மளைத்தான் கம்பளைண்ட்
செய்துவிட்டாள் போலிருக்கு"
பெரும் குழப்பத்துடன்
ஸ்டேஷனுக்குள் நுழைந்தான்
பிரதாப்.

கணவன் மனைவிக்குள்ள
சண்டை வர்றது சகஜம் தான்...
அதுக்காக நடுநிசியில் வீட்டை
விட்டு வெளியே போறது நல்லதில்லை.
வன்கொடுமைகளைப் பற்றி
டிவி, பேப்பர் நியூஸ்ல
எல்லாம் பார்க்குறீங்க தானே?
"இனிமே சமூகப் பொறுப்போடு
நடந்துக்கோங்கன்னு..."

இருவருக்கும் அறிவுரை கூறி,
வீட்டுக்கு அனுப்பி வைத்தார் இன்ஸ்பெக்டர்.

ஒரு கலைஞன் தோல்வியடைய முடியாது...
அவராக இருப்பதே வெற்றி...



பணம் தேவையான அளவு
இருந்தால் நீ எஜமானன்...

இன்று ஈ இதழ் பதிப்பு 7094053241 Whatsapp

மினிகதை



மலர்மதி

கொலை

சிக்கன் கடை ஒன்றில் பணிபுரிந்து வந்தான் குமார். வாடிக்கையாளர் தேர்ந்தெடுக்கும் உயிர்கோழியைப் பிடித்து, அதன் கழுத்தை கத்தியால் "சரக்" கென்று அறுத்து, துண்டுகளாக்குவதே அவன் பணி.

முன் விரோதம் காரணமாக "திடீ"ரென்று கொலை செய்யப்பட்டான் குமார்.

போலீஸ் வந்து புலன் விசாரணை நடத்தியது. "கழுத்தை அறுத்து" கொலை செய்யப்பட்டுக் கிடந்தான் குமார்

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக்கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ்
Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...



பணம் தேவைக்கு அதிகமாக இருந்தால் பணம் உனக்கு எஜமானன்

இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

சிறுகதை...

2345689

பாரதிராஜன் என்கிற ரங்கராஜன்
சென்னை அம்பத்தூரிலிருந்து.
கைபேசிஎண்:7845838739.

2345689.
என்னடா இது தலைப்பே வித்தியாசமாக இருக்கறதே... கதையும் அப்படிதான். ராஜன் பட்டதாரி, பட்டுக்குப் பெயர் பெற்ற மாவட்டத் தலைநகரில் படித்து எல்லோரையும் போல் மேல்படிப்பு படிக்க அல்லது வேலை என்ற எண்ணத்தில் சென்னை நோக்கி பயணம்.

ராஜனின் வாகனம் சைக்கிள் மட்டுமே. ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் கற்றுக் கொள்ளவில்லை, கற்கும் எண்ணமும் இல்லை. அவன் சைக்கிள் கற்றதே பெரிய விஷயம். அதே கண்கள் சினிமாவில் காஞ்சனா குழுவினர் பாட்டுப்பாடி முடித்து, அந்த சமயத்தில் கதாநாயகனாக நடித்த ரவிச்சந்திரன் சைக்கிள் ஓட்டி வர,காஞ்சனா கையில் உள்ள கலர் பொடி அடிக்க அது கதாநாயகன் மேல்பட, ரொம்ப சுவாரஸ்யமான விஷயம் அது. சைக்கிள் ஹேண்டில் பார் வித்தியாசமான முறையில் கார் ஸ்டியரிங் வீல் மாதிரி இருக்கும். ராஜன் ஆரணியில் சைக்கிள் ஓட்ட கற்றுக் கொண்ட சமயத்தில் கீழே விழுந்து அடி பட்டது தான். அதன் பிறகு கல்லூரி படித்த போது சைக்கிள் ஓட்ட கற்றது, சோடா பாட்டில் பின்னால் வைத்து வந்த சைக்கிளில் மோதி அபராதமாக ரூபாய் பத்து தண்டம் அழுதது... அதெல்லாம் பெரிய கதை...

சிங்காரச் சென்னையில் சைக்கிள் மூலமாக வேலைக்கு செல்ல ஆரம்பித்தான் ராஜன். அந்த மாதிரியான சமயங்களில் சென்னை ஐஐடியில் உள்ள சகோதரியைப் பார்க்கச் சென்றான் ராஜன். சுமாராக ஒருமணி கழித்து வெளியே வந்த சமயத்தில் கேட்டில் இருந்த செக்யூரிட்டி, வண்டி எண் கேட்க, ராஜன் சைக்கிளுக்கு ஏது நம்பர் என்றதும், செக்யூரிட்டி சைக்கிளில் நம்பர் இருக்கும் இடம் சீட் பின்னால் என்று காண்பிக்க, அப்போது தான் ராஜனுக்கு சைக்கிளில் நம்பர் இருப்பது தெரியவந்தது.

அந்த சமயத்தில் செக்யூரிட்டி, "ஐஐடியில் இருந்து சைக்கிள்கள் நிறைய திருடு போகிறது. அதை கண்டுபிடிக்கத்தான் இந்த வழி, மேலும் இங்குள்ள சைக்கிள் நம்பர் இந்த ரிஜிஸ்டரில் இருக்கு, அது மட்டுமல்ல, ஐஐடி சைக்கிள்களில் ஐஐடி ஸ்டிக்கர் இருக்கும் அது இல்லை என்றால் சைக்கிள் நம்பர் கேட்பது வழக்கம் தான்"... என்றார்.

அந்த சைக்கிள் நம்பர்தான் 2345689.

Nothing is Permanent



பணம் வருவதற்கு முன்னால் நம்பிக்கை இருக்க வேண்டும்...

இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp





சு.அருண் பிரகாஷ்

இராமச்சந்திரபுரம்.

எனக்குள் இருந்த கவிஞனைக்
கண்டுபிடித்துத் தந்த உனக்கு
அந்தக் கவிஞனுக்குள் இருக்கும் உன்னைக்
கண்டுகொள்ள முடியவில்லையா?

மகிழ்ந்து என்று
காருக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள்.
மனம் ஒப்பவில்லை...
மாட்டுவண்டிப் பயணத்தின்
மட்டற்ற சுகமும் சந்தோஷமும்
கிட்டுமா இந்தக் கார்ப்பயணத்தில்...

Bioclock என்றால் என்ன?

நாம் வெளியூர் செல்ல வேண்டும் என்றால் அதிகாலை 4.00 மணிக்கு அலாரம் செட் பண்ணிவிட்டு தூங்கி விடுவோம். ஆனால் அலாரம் அடிப்பதற்கு முன் எழுந்து விடுவோம். இது தான் Bioclock. நமக்கு தெரிந்த வட்டத்தில் எல்லோரும் 60 – 70 வயதில் இறந்து விடுகிறார்கள். 50 வயதில் எல்லா நோய்களும் வந்து விடும் என்று நம்பி நமது Bioclock இல் செட் செய்து விடுகிறோம். அதனால்தானோ என்னவோ 50 வயதில் நோய் வருகிறது. 70 வயதில் செத்து விடுகிறோம். நமக்கு தெரியாமலே நமது Bioclock ஐ தவறாக செட் செய்து விடுறோம். உதாரணம் 1: மனநிலை சரியில்லாதவர்களுக்கு வயதாவதில்லை. அவர்கள் தோற்றத்தில் பெரிதாக எந்த மாறுபாடும் இருக்காது என்ற உண்மை தெரியுமா? 2: சீனாவில் பெரும்பாலோனார் 100 வயது வாழ்கிறார்கள். அவர்களது Bioclock அப்படி செட் செய்யப் பட்டுள்ளது. எனவே நண்பர்களே, நாம் குறைந்தது 100 வயது வரை வாழ்வோம் என்று Bioclock ஐ மாற்றி அமைப்போம். நமக்கு இந்த சின்ன வயதில் (40 இலிருந்து 60 வயதுக்குள்) எந்த நோயும் வர வாய்ப்பே இல்லை என நம்புவோம். டை அடியுங்கள் (முடி இருந்தால்). இளமையாக தோற்றம் அளியுங்கள் . வயதான தோற்றத்தை அனுமதிக்காதீர்கள். சுறுசுறுப்பாக இருங்கள். வாக்கிங் போகாதீர்கள். ஜாகிங் போங்கள். வயதாக வயதாக ஆரோக்கியம் கூடும் என்று நம்புங்கள். (அது தான் உண்மை). எல்லாத்துக்கும் இந்த மனசு தான் காரணம்.

Never, ever allow the bioclock set your ending.

பணம் உழைப்பை மதிக்கும்...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

கவிதை



குடந்தை பரிபூரணன்.

காத்திருக்கும் போது
கணமும் யுகமாகும்
சேர்ந்திருக்கும் போதோ
சிரித்தோடும் பூத்திருக்கும்
காதல் நோயறியாக் கடிகாரம்
முள்ளுள்ள நோதல் அளிக்கும் நுட்பம்.

புரியாத
கவிதைகள்
வெறும்
எழுத்துக்கள்
அல்ல....

அவைகள்
அர்த்தத்தை
மறைத்து
வைத்திருக்கும்
உணர்வுச்
சுரங்கங்கள்...

நம்திருரஅம்ஏச்



நேரம்

3 நாளைக்கு ஒரு புத்தகம் படிக்க வேண்டும்
என்று நினைத்துக்கொள்ளுங்கள்...
ஓரளவு முயற்சியும் செய்யுங்கள்...
கண்டிப்புடன் பின்பற்றினால்
ஒரு மாதத்தில்
10 புத்தகங்கள் படித்திருப்பீர்கள்...
சின்ன திட்டங்களே பெரிய வெற்றியைத்
தரும்... படித்துத்தான் பாருங்களேன்...

ஆக்கம் - தி.ரேவதி



பணத்தால் பொருள் வாங்கலாம்...

இன்று ஈ இதழ் இணைய இதழ் 7094053241 Whatsapp

குறுங்கதைகள்



நடேஷ் கன்னா,
கல்லிடைக்குறிச்சி
செல் 9944284135

1. மனசு

வீட்டில் சாப்பாடு போதும் என்பதை
வயிறு சொல்லும்
ஹோட்டலில் சாப்பாடு போதும் என்பதை
பர்ஸ் சொல்லும்

2. போன்

சாதா போன் வைத்து இருந்தால்
அந்த போன் நமக்கு அடிமை
ஸ்மார்ட் போன்வைத்து இருந்தால்
நாம் அதற்கு அடிமை

3. பச்சோந்தி

பச்சோந்தி தன் உணவுக்காக நிறம்
மாறும். மனித இனம் அப்படி அல்ல
எப்போது வேண்டுமானாலும் குணம்
மாறும் கவனமாக இருக்க வேண்டியது
மனிதர்களிடம் தான் பச்சோந்திடம் அல்ல

4. மன வலிகள்

சிலரை நீ முக்கியம் என நினைக்கும்
வரை அவர்களால் உன்னை
காய படுத்த முடியும் கண்டு
கொள்ளாமல் இருந்து பார்
உன் மன வலிகள் குறையும்

5. கஷ்டம்

கஷ்ட படாமல் எதுவும் கிடைக்காது
ஆனால் கஷ்ட பட்டு பார்த்தால் தான்
தெரிகிறது. கஷ்டத்தை தவிர
வேறு ஒன்றும் கிடைக்காது என்று



பணத்தால் மகிழ்ச்சியை வாங்க
முடியாது...

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

R.Anusha - win

Tech Trick

டெக்கு + ட்ரிக்கு...

- உங்கள் மொபைலில் தினசரி குவிந்துவிடும் எஸ்எம்எஸ்-களை எளிதாக நீக்க ஒரு வழி... எப்போது புதிய மெசேஜ் வந்தாலும் படித்துவிட்டு பழைய மெசேஜ் இரண்டை டெலிட் செய்து கொண்டே இருங்கள். இதன்மூலம் மெமரி அதிகமாவதை தடுக்கலாம். புதியதை டெலிட் செய்யாதீர்கள்... ஒரு கட்டத்தில் ஓரிரு மெசேஜ் மட்டுமே செல்லில் இருக்கும்.

- உங்கள் மொபைலை தினசரி 5 நிமிடமாவது ஆப் செய்து வைக்கவும்.

- இரவு நெட், வைபை போன்றவற்றை ஆப் செய்து வைக்கவும்.

- மொபைல் 30 சதவிகிதம் இருக்கும்போது சார்ஜ் போடவும். 80 சதவிகிதம் மேல் சார்ஜ் போடாதீர்கள். இது பேட்டரியின் லைப் நீடித்து வரும்.

மனசே ஒரு நிமிசம்...

சில புற சூழ்நிலைகள் உங்களை நிலை தடுமாற வைக்கும். அதைக் கண்டு அஞ்சாதீர்கள். நடப்பது நடக்கட்டும் என்று இருங்கள். பதற்றம் அடையாதீர்கள். தடுமாறாதீர்கள். ஆழந்து சிந்தனை செய்யுங்கள். உங்கள் மனம் கவர் நண்பரிடம் ஆலோசனை கேளுங்கள். மாற்றி சிந்தியுங்கள். கண்டிப்பாக ஒரு மாற்றுவழி இருக்கும். அதைக் கண்டுபிடியுங்கள். அது தான் வாழ்க்கை... தீர்வு இல்லாத பிரச்சனை என்று ஒன்று இல்லை. அப்படி இருந்தால் அதற்கு தீர்வு இல்லை என்று விட்டுவிடுங்கள்... காலம் தீர்வு தரும்.



கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ர.ஸ்ரீஹரி

செல் 7094053241 indhrumail@gmail.com